1982 பிப்ரவரி 8]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இந்த சட்டமுன் வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிற நேரத்திலே விரிவாகவும் விளக்கமாகவும் நான் பதில் சொல்கிறேன் என்று சொல்லி இதை அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் பேரவை முன்னுள்ள கேள்வி.

''தமிழ்நாடு 1982ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) ''திருத்தச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.'

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : இச் சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(இ) ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன் வடிவு, 1982

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இச் சட்ட முன் வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஈ) ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு 1982

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982-ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம்செய்ய அனுமதி கோருகிறேன்.

[1982 பிப்ரவரி 8

(முற்பகல் 11–50)

திரு. அ. ரகுமான்கான்: Sir, I rise to oppose the introduction மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவரவர்களே, இங்கே நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்களால் இந்த மன்றத்தில் அறிமுகம் செய்யப்படுகின்ற இந்த பில்லை நான் மறுக்கிறேன். காரணம் நம்முடைய அமைச்சரிடத்தில் விளக்கம் கேட்க விரும்புகிறேன். தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பெண்களுக்கும் இட ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்ற அந்த நோக்கத்தை எங்கள் கட்சியின் சார்பாக வரவேற்கிறோம். ஆனால் எந்த அடிப்படையில் அந்த இட ஒதுக்கீடு செய்யப்படுகிறது பெண்களுக்கு எவ்வளவு பர்செனட், தாழ்த்தப்பட்டவர்களுக்கு எவ்வளவு பர்செனட் கொடுத்திருக்கிறீர்கள். ஜனத்தொகையின் அடிப்படையிலேயா? அல்லது எந்த அடிப்படையில், எப்படிப்பட்ட அடிப்படையில் அந்த அடிப்படையைப்பற்றி அமைச்சரவர்கள் முதலில் விளக்கி விட்டு அறிமுகம் செய்யலாம்.

மாண்பிமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் ஆர்டினன்ஸைப் படித்திருப்பார்கள்.

This is based on the population and contiguous merits Contiguous the or as already been decided by the Supreme Court

திரு. அ. ரகுமரன்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, பாபுலேஷன் பேசிஸ் என்றால் பெண்களுக்கு 50 பர்செனட் ஒதுக்க வேண்டும். அதுதான் சென்சஸ். அது மட்டுமல்லாமல் இன்னொன்றையும் தெளிவுபடுத்த விரும்புகிறேன். பெண்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதி போக அரிசனங்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதிகளில் அந்த பெண்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் இருப்பவர்கள் போட்டியிடலாமா! எந்த யூனிட்டின் அடிப்படையில் என்பதை எடுத்துச் சொன்னால் தெரிந்து கொள்ள முடியும்.

மாண்பிமிகு பேரவைத் தலைவர் : அந்த பில் விவாதத்திற்கு வரும்பொழுது இதைப்பற்றி பேசிக்கொள்ளலாம்.

THIRU A. RAHMANKHAN - I oppose the Bill.

MR. SPEAKER: You have got every right to oppose the Bill

திரு. அ. ரகுமான்கான்: சபை இருட்டில் இருக்கிறது அவ்வாறு இருக்கக் கூடாது.

1982 பிப்ரவரி 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சபை நல்ல வெளிச் சத்தில்தான் இருக்கிறது.

திரு. அ. ரகுமான்கான் : நான் கேட்கின்ற விளக்கங் களைப்பற்றித் தெளிவு படுத்திவிட்டால் எனக்கு ஆட்சேபனை இல்லை.

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : தலைவரவர்களே விளக்கங்களெல்லாம் ஏற்கனவே சட்டத்திலே விளக்கமாகக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, இதை எடுத்துக்கொள் ளும் நேரத்தில் விரிவாகப் பேசிக்கொள்ளலாம். ஆகவே' சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : சட்டத்திலே இருப்பது விளங்க வில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த பில் வரும்பொழுது அதுபற்றிக் கேட்டுக்கொள்ளலாம்.

திரு. அ. ரகுமான்கான் : மசோதா விளக்கம் இல்லாமல் வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மசோதா வரும்பொழுது சபையில் ஏற்றுக்கொள்கிறீர்களா என்று அதற்காகத்தான் கேட் கப்படுகிறது. ஏற்றுக்கொண்டால் பிறகு அதைப்பற்றி விவா திக்கலாம்.

பேரவை முன்னுள்ள கேள்வி :—

''தமிழ்நாடு 1982-ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற் றப்பெற்று அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.